முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண்.285 /2013

நாள். 19.06.2025 | பி.வா.சா.3 – திரு.செல்லப்பா
த/பெ - திரு.சீனி நாடார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) உங்களுக்கு சொந்த ஊர் லெப்பை குடியிருப்பு என்றால் சரி தான். 1ம் பிரதிவாதி ஆசீர்வாத நாடார்க்கும் அதே ஊர் தான் என்றால் சரி தான். 1ம் பிரதிவாதி வீட்டிற்கு மேற்கு பக்கம் தான் உங்கள் வீடு உள்ளது என்றால் சரி தான். சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் என் தகப்பனாரான சீனி நாடாருக்கு பாத்தியமாகும். அதை யார் கிரையம் வாங்கினார்கள் என்றால் முத்து வேல் நாடார் 6 செண்டு நிலத்தை கிரையம் வாங்கினார். எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்றால் 1958 ல் கிரையம் வாங்கினார். அந்த சொத்தானது ஊருக்குள் உள்ளது.

2) அந்த 6 செண்டில் நீங்கள் மேல் பக்கம் 4 செண்டை கிரையம் வாங்கினீர்கள் என்றால் சரி தான். ஆசீர்வாத நாடார் வீடு எந்த பக்கம் உள்ளது என்றால் அவர் கிரையம் பெற்ற 2 செண்டுக்கு வடக்கு பக்கம் உள்ளது. முத்துவேல் நாடார் சம்பாத்தியம் செய்து தனிப்பட்டு வாங்கிய சொத்து என்றால் சரி தான். சொத்து சம்மந்தமாக முன்பு இருந்த வழக்கு விவரங்கள் பற்றி தெரியுமா என்றால் எனக்கு

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.06.19 16:09:18 +0530

தெரியாது. முத்து வேல் நாடார் சம்மந்தமான முந்தைய வழக்குகளில் நீங்கள் தரப்பினர் இல்லை என்றால் சரி தான்.

3) முத்து வேல் நாடார் தபசில் சொத்துக்களை பொறுத்து உயில் எழுதி வைத்தார் என்றால் சரி தான். அவர் தனது மனைவி செல்லத்தங்கம், மகள்கள் மற்றும் மகன் வசந்தி, சாந்தி, செல்வராஜ் ஆகியோர்களுக்கு எழுதி வைத்துத விட்டார். நான் 2001ல் கிரையம் வாங்கினேன். நான் கிரையம் வாங்கிய சொத்தை நான் தான் அனுபவம் செய்து வருகிறேன். உங்கள் பெயருக்கு பட்டா எல்லாம் வந்து விட்டதா என்றால் பட்டா வந்து விட்டது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.06.19 16:09:23 +0530